**அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபன - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (''கூட்டுத்தாபனம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் இணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 – நிதிக்கூற்றை சமர்ப்பித்தல் | | |
| (i) நியமத்தின் 25 ஆம் இலக்க பந்தியின் பிரகாரமும் நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்பின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரமும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான நிறுவனத்தின் | எதிர்காலத்தில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான கூட்டுத்தாபனத்தின் ஆற்றலினை கூட்டுத்தாபனத்தின் | முகாமைத்துவம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொான் றாக தொடர்ந்து செயற்படுவதற்கான நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பான |

| | | | |
|---|---|---|---|
| | ஆற்றல் மற்றும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பாக குறிப்பிடத்தக்க ஐயப்பாடு இருக்கக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகளை முகாமைத்துவம் மதிப்பீடு செய்ய வேண்டும். எனினும், நிதிக்கூற்றில் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பாக முகாமைத்துவம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.<br><br>எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் மொத்த சொத்து ரூபா 7,592.7 மில்லியனாக இருந்ததுடன் வெளியக பொறுப்புக்கள் ரூபா 6,754.25 மில்லியன் அல்லது மொத்த சொத்துக்களில் 88 சதவீதமாக இருந்தது. மேலும், நிதிப் பிரிவினால் ஏற்கனவே வருமானமாக இனங்காணப்பட்ட, ஆனால் விலைப்பட்டியலிடப்படாத வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,898.86 மில்லியன் தொகையின் அறவீட்டுத்தன்மை நிச்சயமற்றதாக இருந்தது, ஆனால் போதுமான ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | பணிப்பாளர்கள் மதிப்பீடு செய்திருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்குகளைத் தயாரிக்கும் போது, வணிகத்தை கலைப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கான தேவைப்பாட்டை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.<br><br>2023 ஆம் ஆண்டில், கூட்டுத்தாபனம் வாகனப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புக்கள், ஸ்லீப்பர் உற்பத்தி மற்றும் பராமரிப்புப் பணிகள், அவசரகால நிர்மாணப் பணிகள் மற்றும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வேலை வாய்ப்புக்களுக்கான திறன் பயிற்சி போன்ற பல்வேறு வணிகக் கண்ணோட்டங்களை நோக்கி நகர்ந்துள்ளது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.<br><br>மேலும், அதன் செயற்பாட்டுத் தேவைப்பாடுகளிற்கு ஆதரவளிகும் வகையில், 2023 ஒக்தோபரில் இலங்கை வங்கியுடன் (BOC) பிணைமுறி வசதி பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டிருந்தது.<br><br>எனவே, கூட்டுத்தாபனம் அதன் செயற்பாடுகளுக்குள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை கொண்டிருக்கிறதென எதிர்பார்க்கிறது என்பதை சபை மீண்டும் வலியுறுத்துகிறது. | நியாயமான மதிப்பீட்டை மேற்கொண்டு பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும். |
| (ii) | நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக்கூடாது. எனினும், ரூபா 4.27 மில்லியன் தொகையான கொள்வனவு முற்பணங்கள் மற்றும் நானவித முற்பணங்களின் செலவு மீதிகள் அத்தகைய கணக்குகளின் | நாங்கள் அடுத்த ஆண்டில் செலவு மீதிகளை சீர்செய்வோம். | சொத்துக்கள் எதிர் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் எதிர் செலவினங்களை ஈடுசெய்வது நிதிக்கூற்றுக்களை தவறாக சித்தரிக்க காரணமாகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | வரவு மீதிகளுக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டுள்ளன. இதனால் நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | | |
| (iii) | நியமத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனம் தனித்தனியாக வேறுபட்ட இயல்புடைய உருப்படிகளை அவை பொருண்மையற்றதாக இருந்தாலன்றி செயற்பாடுகளாக காட்ட வேண்டும். எனினும், ரூபா 6.08 மில்லியன் தொகையான மூலதன நடைமுறை வேலை நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாகக் காட்டப்படாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | கட்டிட நடைமுறை வேலை பூர்த்தியடைந்த பின்னர் கட்டிடத்திற்கு மாற்றப்படும். இது 2023 ஆம் ஆண்டில் தனித்தனியாகக் காட்டப்படும். | நியமத்தின் பிரகாரம் நியாயமாக சமர்ப்பித்தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதிப் பிரிவால் நிர்மாண ஒப்பந்தங்களின் வருமானமாக இனங்காணப்பட்ட ரூபா 3,519.81 மில்லியன் மீதி வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறவேண்டியவையாக இருந்தது, ஆனால் வாடிக்கையாளர்களுக்கு விலைப்பட்டியல் வழங்கப்படவில்லை. எனினும், நிர்மாணப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் ரூபா 1,620.95 மில்லியன் தொகை மாத்திரமே வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, ரூபா 1,898.86 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் வேறுபாட்டிற்கான காரணங்கள் தீர்மானிக்கப்படவில்லை. எனவே, இந்த வேறுபாட்டு தொகையின் அறவிடும் தன்மை மிகவும் நிச்சயமற்றதாக இருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும், வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், வாடிக்கையாளர்களின் மொத்த பெறவேண்டிய தொகையில் ரூபா 2,560.22 மில்லியன் 03 | வாடிக்கையாளர் மீதியிலிருந்து பெறவேண்டிய நிச்சயமற்றவையை தீர்வுசெய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் மீதியிலிருந்து பெறவேண்டிய நிச்சயமற்றவைக்காக வருடாந்த கணக்குகளில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கான காரணங்கள் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அதற்கேற்ப நிச்சயமற்றவைக்கு போதுமான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேலாகவும் ரூபா 1820.56 மில்லியன் 06 ஆண்டுகளுக்கு மேலாகவும் இருந்தன. எனினும், இந்த நிச்சயமற்ற தன்மையை கூட்டுத்தாபனம் இனங்கண்டிருக்காததுடன் போதுமான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2022 மார்ச் முதல் 2024 சனவரி வரையிலான (21 மாதங்கள்) கடன் தவணைகள் மற்றும் வட்டிகளை திருப்பிச் செலுத்துவதற்கான இரண்டு ஒத்திவைப்புகளுக்காக இலங்கை வங்கி அங்கீகாரம் அளித்ததன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான காலக் கடன்களுக்கான வட்டிச் செலவினம் முன்னைய ஆண்டில் ரூபா 199 மில்லியனிலிருந்து ரூபா 102.82 மில்லியனால் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் இந்த விடயத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | முகாமைத்துவக் கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பங்குதாரர்களின் முடிவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் அனைத்து பொருண்மையான தகவல்களையும் முகாமைத்துவம் வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 53.8 மில்லியன் பெறுமதியான விற்பனைக் கிரயத்தின் முடிவுப்பொருட்களின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிற்கான சீராக்கம் நாட்குறிப்பு பதிவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், விற்பனைக் கிரயத்தின் கீழ் இறுதி இருப்புக்கள் இரட்டிப்பாக காட்டப்பட்டிருந்ததுடன், அதன் விளைவாக ஆண்டுக்கான இலாபம் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பதிவுகளின் சரியானதன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியயெழுப்பும் வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணங்களை செலுத்தாததற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் விதிக்கப்பட்ட ரூபா 961.81 மில்லியன் தொகையான மேலதிகக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை அல்லது | இது 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் இது 2023 ஆம் ஆண்டில் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ரூபா 124.43 மில்லியன் தொகையான வற் உள்ளடங்கலாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வற் ரூபா 1,474.19 மில்லியனாக இருந்தது, எனினும், அது நிதிக்கூற்றில் ரூபா 1,236.19 மில்லியனாகக் காட்டப்பட்டுள்ளது. இதனால், நிதிக்கூற்றில் செலுத்த வேண்டிய வற் ரூபா 238 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | இந்த வேறுபாட்டுத் தொகை 2023 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 3.81 மில்லியனை கூட்டுத்தாபனம் இனங்கண்டுள்ளது. எனினும், சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் இந்த கணக்காய்வுக் கட்டணங்கள் அனைத்தும் மீளாய்வாண்டுடன் தொடர்புடையவை அல்ல, ஆனால் முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடையவையாகும். எனவே ஆண்டிற்கான இலாபம் அதே தொகைகளால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டது. ரூபா 3.81 மில்லியன் ஒப்பீட்டளவில் சிறிய தொகையாகக் கருதப்பட்டதால், முன்னைய ஆண்டு சீர்செய்ய முயற்சி எடுக்கப்படவில்லை. | ஆண்டுக்கான இலாபத்தை பெறும்போது அதற்குரிய வருமானம் மற்றும் செலவினங்களை மாத்திரமே கருத்தில் கொள்ள வேண்டும். |
| (எ) | ரூபா 1.54 மில்லியன் பிணைமுறிக் கட்டணங்கள், நலன்புரி மற்றும் பொழுதுபோக்குச் செலவினங்களில் தவறாகச் சேர்க்கப்பட்டுள்ளன. | குறித்துக் கொள்ளப்பட்டது. எனினும் பிழையான நுழைவு இறுதி இலாபத்தில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் நியாயமான சமர்ப்பிப்பிற்காக செலவினங்கள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| | கணக்கு விடயம் | விடயம் பெறுமதி ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நானாவித முற்பணங்கள் மற்றும் கொள்வனவு முற்பணங்கள் - நிர்மாணம் | 19.47 | வயதுப் பகுப்பாய்வு | இந்த தொகையை தீர்வு செய்வதற்கு குழு நியமிக்கப்படும். வயது பகுப்பாய்வு 2023 ஆம் ஆண்டில் வழங்கப்படும். | மீதிகளின் இருக்கும் தன்மை, சரியான தன்மை மற்றும் முழுமைத் தன்மை ஆகியவற்றை திருப்திகரமாக பரீட்சித்து உறுதிப்படுத்துவத |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | கடன் எல்லை கணக்கு கடிதம் | 151.08 | விபரமான பட்டியல் மற்றும் பெறப்பட்ட பொருட்களின் விபரங்கள் | இந்த தொகையை தீர்வு செய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | ற்கு அனைத்து ஆவண சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | நானாவித கடன்பட்டோர் | 29.91 | விபரமான பட்டியல்கள் | பட்டியல் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்படும். | |
| (ஈ) | தயார் கலவை கடன்பட்டோர் | 34.80 | விபரமான பட்டியல்கள் | மீதி உறுதிப்படுத்தல்கள் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்படும். | |
| (உ) | நிர்மாண கடன்பட்டோர் | 399.37 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் | | |
| (ஊ) | நிறுத்திவைத்தல் பணம் - நிர்மாணம் | 573.10 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் | | |
| (எ) | போக்குவரத்து விளக்கு முறைமை கடன்பட்டோர் | 28.47 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் | | |
| (ஏ) | கொங்கிறீட் முற்ற கடன்பட்டோர் | 52.64 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் | | |
| (ஐ) | அஸ்பால்ற் கடன்பட்டோர் | 1.62 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் | | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 691.23 மில்லியன் கூட்டுமொத்தமான கொங்கிறீட் முற்றம், நிர்மாணம், போக்குவரத்து விளக்கு முறைமை கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய தாமத சேதங்கள், பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் மற்றும் கொள்வனவு முற்பணங்கள் 03 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தன. | இந்த கடன்பட்டோரை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகளை கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகிறது. | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் மூலம் நிலுவை மீதிகளை செயற்திறனாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | குறித்துக் கொள்ளப்பட்டது. | இந்த மீதிகளை |

| | | |
|---|---|---|
| பெறப்பட்ட ரூபா 32.34 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தன. | | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நி.பி. 756 | 2023 ஒக்தோபர் 31 வரை மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது 2023 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்படும். | நடைமுறையல்லாத சொத்துக்களின் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்தம் கூட்டுத்தாபனத்தால் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு, அந்த அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் | ரூபா 143.26 மில்லியன் தொகையான EPF பங்களிப்புக்கள் மற்றும் அதன் மீதான மேலதிகக் கட்டணங்கள் 2020 முதல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இருந்து ஏற்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக கூட்டுத்தாபனத்தின் காசுப்பாய்ச்சல் நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. மேலும், பொருளாதார நெருக்கடியானது நிர்மாணத் தொழிலை மோசமாகப் பாதித்திருந்ததுடன் இதனால், தீர்ப்பனவு செய்யப்படாத EPF பங்களிப்பின் பெரும் தொகையைத் தீர்ப்பனவு செய்வதில் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பதன் மூலம் அதனை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை | இந்த நியதிச்சட்ட கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டு வருகிறது. | |
| (இ) | பெறுகை வழிகாட்டல்/ 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க NPA சுற்றறிக்கையின் 5.4.4 (iii) ஆம் பிரிவு | செயற்திட்டப் பணிகள் 90 சதவீதத்தை அடைந்துகொள்வற்கு முன்னர் பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட 12 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 10.28 மில்லியன் பெறப்பட்ட அத்தகைய முற்பணங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்படாமல் கணக்குகளில் இருந்தன. | குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**1.8 காசு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண ஒப்பந்தம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 792.83 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்களை தள்ளுபடி செய்து 03 மாத காலப்பகுதிக்கு ரூபா 596.12 மில்லியன் தொகையான கடனை கூட்டுத்தாபனம் அரச வங்கியிடமிருந்து பெற்றிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட 03 மாத காலப்பகுதிக்குள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து இந்த விலைப்பட்டியல்களை வங்கிக்கு தீர்ப்பனவு செய்யாததன் காரணமாக கூட்டுத்தாபனம் ரூபா 17.52 மில்லியன் தொகையான வட்டியை செலுத்தியுள்ளது. | இணங்கப்பட்டது. | பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தி வட்டிச் செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு அரச வங்கிகளில் இருந்து எடுக்கப்பட்ட காலக் கடன் மீதிகள் ரூபா 1,848.24 மில்லியனாக இருந்ததுடன் பிற்போடப்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 1,727.18 | 2024 சனவரி இறுதி வரை வங்கிகள் கடன் ஒத்திவைப்பை வழங்கியுள்ளன. திறைசேரி உத்தரவாதக் கடனை ஒத்திவைப்பதற்கு | புதிய ஒத்திவைப்பு நிபந்தனைகளின் பிரகாரம் கடன் மற்றும் வட்டியை செலுத்துவதில் கூட்டுத்தாபனத்தின் |

| | | |
|---|---|---|
| மில்லியனாக இருந்தது. இந்தக் கடன்களின் அடிப்படையில், திறைசேரி உத்தரவாதத்தின் கீழ் ரூபா 990.61 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 518.60 மில்லியனுக்கு கூட்டுத்தாபனத்தின் காணிகளை உத்தரவாதமாக கூட்டுத்தாபனம் அடகு வைத்துள்ளது. | இலங்கை பொதுத் திறைசேரி ஏற்கனவே அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. | முகாமைத்துவம் அதன் கவனத்தை செலுத்த வேண்டும். |

### 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு முதல் ரூபா 2,403 மில்லியன் தொகையான வற் மற்றும் அதன் மீதான மேலதிகக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவக் கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் பெறுமதி சேர் வரி சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் ரூபா 7.15 மில்லியன் தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் அதன் மீதான மேலதிகக் கட்டணங்கள் 2010 முதல் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபன மறுசீரமைப்பின் போது NBT பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படும். | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் கூட்டுத்தாபனம் இணங்க வேண்டும். |
| (இ) 2015 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ரூபா 101.23 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய ESC உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்பு செயன்முறையின் போது ESC பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படும். | பொருளாதார சேவைக் கட்டணங்கள் திருத்தச் சட்டத்துடன் கூட்டுத்தாபனம் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 26,921,045 வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 96,124,611 ஆக இருந்ததால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 69,203,566 தொகையான கடுமையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டியது. வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிர்வாக செலவினங்கள் அதிகரித்தமையே இந்நிதி விளைவிற்கு பங்களித்ததற்கான முக்கிய காரணங்களாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரியில் உள்ள மூவாகம பழைய பாலத்தை அகற்றுவதற்கான செயற்திட்டம், 2013 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் முறையான ஒப்பந்த உடன்படிக்கையை கைச்சாத்திடாமல், கூட்டுத்தாபனத்தினால் வாய்மொழிமூல அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்ளப்பட்டது. 2019 இல் அகற்றும் செயன்முறையை பூர்த்தி செய்த பின்னர், அகற்றி போக்குவரத்து செய்யும் கிரயத்தை அறவிடவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 53.63 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியலை கூட்டுத்தாபனம் சமர்ப்பித்திருந்தது. இந்தத் தொகை இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகையை அறவிடுவதில் கூட்டுத்தாபனம் பின்தொடர் நடவடிக்கையை எடுத்து வருகிறது. | RDA இடமிருந்து நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மொனராகலையில் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு முரணாக மாணிக்கக்கல் அகழ்வு செயற்திட்டத்திற்காக கூட்டுத்தாபனம் ரூபா 5.84 மில்லியனை செலவிட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு வரை எந்த வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. | சட்டத்தின் நோக்கத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் முடிவை எடுக்க வேண்டும். |
| (இ) | இலாபக் கணிப்பீட்டு பட்டியலின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்ப்படுத்தப்பட்ட 92 செயற்திட்டங்களில் 17 நிர்மாண செயற்திட்டங்களில் இருந்து ரூபா 128.91 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டம் இனங்காணப்பட்டிருந்தது. | நிதிப் பற்றாக்குறையால் நிர்மாணம் நிறுத்தப்பட்டது. தொடர்புடைய காலப்பகுதிக்கு மேந்தலை செலவினங்களுக்காக செயலவற்ற உரிமைக்கோரல் மேற்கொள்ளப்படும். கொவிட் காலப்பகுதியில் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் பொருள் தட்டுப்பாடு காரணமாக பணி நிறுத்தப்பட்டது. | நிர்மாண செயற்திட்டங்களால் ஏற்படும் நட்டத்தைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் முழுமையான சொந்த துணைக்கம்பனியான தேவ்கோஷோவ (பிறைவேட்) | 2023.09.15 இல் நடைபெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் | முடிவுறுத்தல் செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | லிமிட்டட் செயற்பாடற்று இருந்ததால், 2006 ஆம் ஆண்டில் கம்பனியை முடிவுறுத்துவதற்கு சபை தீர்மானத்தை எடுத்திருந்தது. முடிவுறுத்தல் செயன்முறை 2023 ஒக்தோபர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் (AMC) கூட்டம், இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் செயலாளர் அமைச்சின் மேலதிக செயலாளருக்கு அறிவுறுத்தியிருந்தார். | கூட்டுத்தாபனம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

**3.2 குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 114.98 மில்லியன் கிரயத்திலான 39 மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை திருத்தப்பட வேண்டியிருந்தமை இரத்மலானையில் உள்ள தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. திருத்தம் செய்வதற்காக ரூபா 19.23 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஒக்தோபர் 31 வரை கூட்டுத்தாபனத்தால் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடியால், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை திருத்தம் செய்ய முடியவில்லை.<br><br>பெரும்பாலான செயற்திட்டங்கள் கிடப்பில் உள்ளதால், வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு தேவை காணப்படவில்லை. எதிர்காலத்தில் தேவை ஏற்படும் போது, மேற்கூறியவற்றை திருத்தம் செய்து பயன்படுத்தும். | சொத்துக்கள் முறையாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 489 ஆக இருந்ததுடன் உண்மையான பதவியணியினர் 565 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பல்வேறு பதவிநிலைகளுக்கு 76 ஊழியர்கள் மேலதிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கூட்டுத்தாபனம் நிர்மாணப் பணிகளுக்கு தொழிலாளர் தேவையின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியுள்ளது. | யதார்த்தமான பதவியணி நிலைகளைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கால ரீதியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்வதன் மூலம் பின்தொடரப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தில் உயர் முகாமைத்துவத்தின் ஒரு பதவி வெற்றிடமாக இருந்தது. இதற்கு மேலதிகமாக 02 பிரதம பொறியியலாளர்கள் (கொங்கிறீட் முற்றம்) மற்றும் ஒரு பிரதம | இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை | யதார்த்தமான பதவியணி நிலைகளைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கால ரீதியான அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியலாளர் (வடிவமைப்பு) ஆகிய 03 வெற்றிடங்கள் காணப்பட்டன. | விடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பாய்வு செய்வதன் மூலம் பின்தொடரப்பட வேண்டும். |
| (இ) | சிவில் பொறியியலாளர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆகும். எனினும் 51 சிவில் பொறியியலாளர்கள் அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | கூட்டுத்தாபனம் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு தொழிலாளர் தேவையின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் பதவியணியிரை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியுள்ளது. | யதார்த்தமான பதவியணி நிலைகளைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கால ரீதியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்வதன் மூலம் பின்தொடரப்பட வேண்டும். |
| (ஈ) | 20 பாதுகாவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். | 2022 ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள செயற்திட்டத் தளங்களில் உள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு கூட்டுத்தாபனம் பாதுகாப்புப் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியிருந்தது. | யதார்த்தமான பதவியணி நிலைகளைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கால ரீதியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்வதன் மூலம் பின்தொடரப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 134 நாட்கள் தாமதமாக 2023 யூலை 13 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டு கூட்டுத்தாபன வருடாந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டு 2023 மார்ச் 02 இல் பணிப்பாளர் சபைக்கு (BOD) அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது. BOD புதியது என்பதால் அவர்கள் மதிப்பாய்வு செய்வதற்கு நேரம் கோரியதால் 2023 யூலை 06 இல் அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |